ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2212 - 2021 ජනවාරි මස 22 වැනි සිකුරාදා - 2021.01.22

*2212 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 194 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 202 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, சனவரி மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

191-B 82097-5,403 (2021/ 01)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. *விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*

II. *விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;*

III. *இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;*

IV. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*

V. *இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;*

VI. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;*

VII. *பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;*

VIII. *பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.*

*பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.*

1. *சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.*
2. *பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.*
3. *பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*
4. *சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.*
5. *பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.*
6. *பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;*
7. *உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.*
8. *பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.*
9. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.*
10. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள்* (Electronic Communication Instruments/ Devices) *தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.*
11. *இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*
12. *பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.*
13. *எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.*
14. *பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.*
15. *பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.*
16. *பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.*
17. *பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:*

(i) *சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;*

(ii) *பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;*

(III) *பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.*

(a) *ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.*

(b) *சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.*

(iv) *பரீட்சார்த்தி புளூடூத்* (Bluetooth) *போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை* (Electronic Communication Devices) *உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;*

(v) *பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;*

(vi) *பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;*

(vii) *நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;*

(vIII) *விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;*

(ix) *கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;*

(x) *கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;*

(xi) *ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;*

(xii) *உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;*

(xIII) *ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.*

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.*

*இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரல் அறிவித்தல்- இரத்துச் செய்தல் - பொலநறுவை மாவட்டம்

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் கீழ் குறிப்பிடப்பட்ட இலக்கம் 2020 மற்றும் 2020.11.13 ஆந் திகதிய வர்த்தமானியில் I ஆவது பிரிவில் (II ஆ) ஆவது பந்தியில் என்னால் பிரசுரிக்கப்பட்ட பொலநறுவை மாவட்டத்தின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவில் மாத்திரம் விண்ணப்பம் கோரலினை இரத்துச் செய்கின்றேன்.

கே. ஜி. தர்மதிலக,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, சனவரி 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் |
|---|---|---|
| பொலநறுவை | திம்புலாகல | எகொடபற்று வடக்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தமன்கடுவ பலாத்த பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி |

1-525

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரல் அறிவித்தல்- இரத்துச் செய்தல் - பொலநறுவை மாவட்டம்

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் கீழ் குறிப்பிடப்பட்ட இலக்கம் 2020 மற்றும் 2020.11.13 ஆந் திகதிய வர்த்தமானியில் I ஆவது பிரிவில் (II ஆ) ஆவது பந்தியில் என்னால் பிரசுரிக்கப்பட்ட பொலநறுவை மாவட்டத்தின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவில் மாத்திரம் விண்ணப்பம் கோரலினை இரத்துச் செய்கின்றேன்.

கே. ஜி. தர்மதிலக,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, சனவரி 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் |
|---|---|---|
| பொலநறுவை | திம்புலாகல | எகொடபற்று வடக்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தமன்கடுவ பலாத்த பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி |

1-580

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரல் அறிவித்தல் - இரத்துச் செய்தல்

மாத்தளை மாவட்டம்

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் கீழ் குறிப்பிடப்பட்ட இலக்கம் மற்றும் திகதிய வர்த்தமானியில் என்னால் பிரசுரிக்கப்பட்ட மாத்தளை மாவட்டத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரல் அறிவித்தலை இரத்துச் செய்கின்றேன்.

கே. ஜீ. தர்மதிலக,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2020, திசெம்பர் 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | வர்த்தமானி இலக்கம் | வர்த்தமானி திகதி |
|---|---|---|---|---|
| மாத்தளை | மாத்தளை | மாத்தளை நகரப் பிரிவின் கொங்கா வெல பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | 2202 | 2020.11.13 |

01-581

---

**ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

**சமூக சேவைகள் திணைக்களம்**

சைகை மொழிபெயர்ப்பாளர் (தரம் III)/வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (தரம் III)

சமூக சேவைகள் திணைக்களத்தின் சைகை மொழிபெயர்ப்பாளர் 20 பதவிகள் மற்றும் வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் 08 பதவிகள் தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களினை, பணிப்பாளர் சமூக சேவைகள் திணைக்களம், 02 ஆவது மாடி II ஆவது கட்டம், செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2021.02.19 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை வைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சைகை மொழிபெயர்ப்பாளர் (தரம் III)/ வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (தரம் III) தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். www.socialservices.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக மாதிரிப் படிவம் மற்றும் விபரங்களினைப் பெற்றுக்கொள்ள முடியும். இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள்.-

1. **சைகை மொழிபெயர்ப்பாளர்.-**

* ஆட்சேர்ப்புச் செய்யப்படும் இடங்கள்.- கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, திருகோணமலை, இரத்தினபுரி மற்றும் கேகாலை போன்ற மாவட்டச் செயலகங்கள், அங்கவீனமுற்ற பிள்ளைகள் பயிற்சி பெறும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனங்கள், பிரதான நீதி நிறுவனங்கள்.

1.1 **திறந்த ஆட்சேர்ப்பு**.-

1.1.1 **வயது வரையறை**.- விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

1.1.2 **கல்வித் தகைமைகள்**.-

(அ) சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ) க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் (சாதாரணப் பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து) ஒரே தடவையில் சித்திபெற்றிருத்தல் (பழைய விடயப் பரிந்துரையின் கீழ் மூன்று (03) பாடங்களிலும் ஒரே தடவை சித்திபெற்றிருத்தல் போதுமானது).

1.1.3 **வாழ்க்கைத் தொழில் தகைமைகள்**.- தேசிய கல்வி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருட சைகை மொழிபெயர்ப்பு டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருட சைகை மொழிபெயர்ப்பு டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது

மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றினூடாக நடாத்தப்படும் வருடமொன்றுக்குக் குறையாத சைகை மொழி பெயர்ப்பு டிப்ளோமாச் சான்றிதழ்.

1.1.4 **அனுபவம்**.- பொருத்தமற்றது.

1.1.5 **உடற் தகுதிகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத் தகுதியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

1.1.6 **ஏனையவை**.-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்.

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பில் தேவையான சகல தகைமைகளினையும், விண்ணப்பங்களினைக் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தினத்தன்று அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1.1.7 **ஆட்சேர்ப்பு முறைமை**.- எழுத்துமூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.1.7.1 **எழுத்து மூலப் பரீட்சை**.-

| விடயங்கள் | நேரம் | ஆகக்கூடிய மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| உளச்சார்பு பரீட்சை | நேரம் 01 மணி | 100 | 40 |
| மொழித்திறன் | நேரம் 01 மணி | 100 | 40 |

1.1.7.2 **வாழ்க்கைத் தொழில் பரீட்சை**.- சைகை மொழி நடைமுறை அறிவினைப் பரீட்சித்தல்

| விடயங்கள் | நேரம் | ஆகக்கூடிய மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| சைகை மொழி நடைமுறை அறிவினைப் பரீட்சித்தல் | நேரம் 01 மணி | 100 | 40 |

1.1.8 **சாதாரண நேர்முகப் பரீட்சை**.- பதவிக்கு வேண்டப்பட்ட தகைமைகளினைப் பூர்த்தி செய்துள்ளாரா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு சான்றிதழ்களினைப் பரீட்சித்தல். (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.)

1.1.9 **சம்பள அளவுத் திட்டம்**.- பொ. நி. சு. 03/ 2016 இன் பிரகாரம் MN 02-2016 சம்பள அளவு ரூபா 28,940-10×300-11×350-10×560-10×660-ரூபா 47,990.00 ஆகும்.

1.1.10 **குறிப்பு**.- எழுத்துமூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சையொன்றினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்து மூலப்பரீடசையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களிலிருந்து இருமடங்கினர் வாழக்கைத் தொழில் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன், அத்தருணத்தில் சாதாரண நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்படும். சாதாரண நேர்முகப் பரீடசையில் தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களுக்கிடையே, எழுத்துமூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சை இரண்டிலுமான மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறன் ஒழுங்கு வரிசையின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.1.11 **சேவை நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதலும் வேண்டும். பொ. நி. சு. 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிரூபங்களின் பிரகாரம், ஐந்து வருடங்களினுள் வேண்டப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.2 **வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு**.-

1.2.1 **கல்வித் தகைமைகள்**.- சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

1.2.2 **வாழ்க்கைத் தொழில் தகைமைகள்**.- தேசிய கல்வி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருட சைகை மொழிபெயர்ப்பு டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருட சைகை மொழிபெயர்ப்பு டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது

மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றினூ டாக நடாத்தப்படும் வருடமொன்றுக்குக் குறையாத சைகை மொழி பெயர்ப்பு டிப்ளோமாச் சான்றிதழ்.

1.2.3 **அனுபவம்**.- சமூக சேவைகள் திணைக்களத்தின் பராமரிப்பாளர் அல்லது இல்லக்காப்பாளர் பதவியொன்றில் 05 வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலப்பகுதியொன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.

1.2.4 **உடற் தகுதிகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத் தகுதியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

1.2.5 **பிற**.-

(i) நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.
(ii) தகைமைகள் பூர்த்தி செய்யப்படவேண்டிய தினமன்று தொடர்ந்தேர்ச்சியான ஐந்து (05) வருடக் காலப்பகுதியினுள் திருப்திகரமான சேவைக் காலப்பகுதியொன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பில்தேவையான சகல தகைகைமளினையும் விண்ணப்பங்களினைக் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தினத்தன்று அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1.2.6 **வயது**. - தொடர்பற்றது.

1.2.7 **ஆட்சேர்ப்பு முறைமை**. - எழுத்து மூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சையொன்றினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.2.7.1 **எழுத்து மூலப் பரீட்சை.-**

| விடயங்கள் | நேரம் | ஆகக்கூடிய மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| உளச்சார்புப் பரீட்சை | நேரம் 01 மணி | 100 | 40 |
| மொழித்திறன் | நேரம் 01 மணி | 100 | 40 |

1.2.7.2 **வாழ்க்கைத் தொழில் பரீட்சை**

| விடயங்கள் | நேரம் | ஆகக்கூடிய மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| சைகை மொழி நடைமுறை அறிவினைப் பரீட்சித்தல் | நேரம் 01 மணி | 100 | 40 |

1.2.8 **சாதாரண நேர்முகப் பரீட்சை.-** பதவிக்கு வேண்டப்பட்ட தகைமைகளினைப் பூர்த்தி செய்துள்ளாரா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு சான்றிதழ்களினைப் பரீட்சித்தல். (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.)

1.2.9 **குறிப்பு.-** எழுத்துமூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சையொன்றினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களிலிருந்து இருமடங்கினர் வாழ்க்கைத் தொழில் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன், அத்தருணத்தில் சாதாரண நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்படும். சாதாரண நேர்முகப்பரீட்சையில் தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களுககிடையே, எழுத்துமூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சை இரண்டிலுமான மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறன் ஒழுங்கு வரிசையின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.2.10 **சேவை நிபந்தனைகள்.-** இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதலும் வேண்டும். பொ. நி. சு. 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிருபங்களின் பிரகாரம், ஐந்து வருடங்களினுள் வேண்டப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2. **வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (விவசாயம், உணவுத் தொழில்நுட்பம், எந்திர வல்லுனர், கணனி, நடனம் மற்றும் சங்கீதம், சீமெந்துக் கைத்தொழில்).-**

2.1 **வயது வரையறை.-** விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2.2 **கல்வித் தகைமைகள்.-**

(அ) **வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (உணவுத் தொழில்நுட்பம்) பதவிகளுக்கான கல்வித்தகைமைகள்.-**
சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) **வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (விவசாயம், எந்திர வல்லுநர், கணினி, நடனம் மற்றும் சங்கீதம், சீமெந்துக் கைத்தொழில்).**

(i) சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் (06) பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் பெற்றிருத்தல் மற்றும்

(ii) கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் வேண்டிய பாடவிதானமொன்றில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல், மூன்றாம் நிலைக் கல்விப் பாடநெறியொன்றினைத் தொடர்வதற்குத் தேவையான செயற்திறன் மட்டத்தினைப் பெற்றிருத்தல்.

2.3 **வாழ்க்கைத் தொழில் தகைமைகள்.-** உரிய வாழ்க்கைத் தொழில் தொடர்பில் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழ் அல்லது

சிறுகைத்தொழில் திணைக்களத்தில் அல்லது ஆடைக் கைத்தொழில் திணைக்களத்தில் இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழ் அல்லது

சமூகசேவைகள் திணைக்களம் அல்லது தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அல்லது அதனுடன் இணைந்த நிறுவனங்களினூடாக நடாத்தப்பட்ட இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடப் பாடநெறிச் சான்றிதழ் அல்லது

வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை அல்லது அதனுடன் இணைந்த நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட உரிய வாழ்க்கைத் தொழில் தொடர்பிலான இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழ் அல்லது

மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய வாழ்க்கைத் தொழில் திறன் (NVQ) ஐந்தாவது (05) மட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட தொழில்நுட்பப் பாடநெறி அல்லது அதற்குச் சமம் என மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியொன்றினை வெற்றிகரமாக முன்னெடுத்து சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

2.4 **அனுபவம்**.- தொடர்பற்றது.

2.5 **உடற் தகுதிகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத் தகுதியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

2.6 **பிற**.-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்.

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பில் 4.1 தொடக்கம் 4.6 வரையான சகல தகைமைகளினையும், அத்தகைமைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தினத்தன்று அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

2.7 **ஆட்சேர்ப்பு முறைமை**.- எழுத்துமூல மற்றும் வாழக்கைத் தொழில் பரீட்சை பெறுபேற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்து மூலப்பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்களில் அதிகூடிய மதிப்பெண்களினைப் பெற்ற திறன் ஒழுங்கு முறையின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, இருமடங்கினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சாதாரண நேர்முகப் பரீட்சையில் தகைமைகளினைப் பெற்றவர்கள் மாத்திரமே வாழ்க்கைத் தொழில் பரீட்சைக்கு முன்வைக்கப்படுவர்.

வாழ்க்கைத் தொழில் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்கள், அவர்கள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளினதும், வாழ்க்கைத் தொழில் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளினதும் மொத்தக் கூட்டுத்தொகையின் பிரகாரம், திறன் ஒழுங்கு முறையில் வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கை பயிற்சிப் பாடநெறிக்குத் தெரிவு செய்யப்படுவர். அத்தொகுதியினர் 03 மாதங்கள் கற்பித்தல் முறைமை தொடர்பில் பயிற்சிப் பாடநெறியொன்றினை முன்னெடுத்து வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு சான்றிதழ்களினைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

2.7.1 **எழுத்து மூலப் பரீட்சை**.-

| விடயங்கள் | நேரம் | ஆகக்கூடிய மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| உளச்சார்பு பரீட்சை | 01 மணி நேரம் | 100 | 40 |
| விளங்கிக்கொள்ளுதல் | 01 மணி நேரம் | 100 | 40 |

2.8 **சம்பள அளவுத் திட்டம்**.- பொ. நி. சு. 03/2016 இன் பிரகாரம் MT 01-2016
சம்பள அளவு ரூபா 29,840.00-10×300-11×350-10×560-10×660-ரூபா 48,890.00 ஆகும்.

2.9 **சேவை நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதலும் வேண்டும். பொ. நி. சு. 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிருபங்களின் பிரகாரம், ஐந்து வருடங்களினுள் வேண்டப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.-

* சமூக சேவைகள் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் நிறுவனமொன்றினூடாக எழுத்துமூலப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

* மேற்குறிப்பிட்ட தகைமைகளினைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய வெற்றிடங்களினைக் கொண்ட நிறுவனத்தில் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்கள் கட்டாயச் சேவையின் பின்னர் மாத்திரமே வருடாந்த இடமாற்றத்தினைக் கோருவதற்கு தகைமையினைப் பெறுவர்.

சந்தன ரணவீர ஆரச்சி,
சமூக சேவைகள் பணிப்பாளர்.

சமூக சேவைகள் திணைக்களம்,
2 ஆவது மாடி,
II ஆவது கட்டம்,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.
2021, சனவரி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

........................ **பதவி தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்யும் விண்ணப்பப்படிவம்**

மொழி ஊடகம் [ ]

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :-------------------------------------------------------.

02. முதலெழுத்துக்கள் சுட்டி நிற்கும் பெயர் :-------------------------------------------------.

03. முகவரி :------------------------------------------------------------.

04. தொலைபேசி இலக்கம் :-----------------------------------------------------------.

05. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்:--------------------------------------------------------------.

06. பிறந்த திகதி :------------------------------------------------------------.

07. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :-----------------------------.

வருடங்கள் :--------. மாதங்கள் :----------. நாட்கள் :-------.

08. திருமணமானவர்/திருமணமாகாதவர் :--------.

09. ஆண்/பெண் பாகுபாடு :---------.

10. கல்வித் தகைமைகள் -

க. பொ. த. (சாதாரண தரம்)

வருடம் :-------. பரீட்சை சுட்டெண் :----------.

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| கணிதம் | | | |
| சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

க. பொ. த. (உயர் தரம்)

வருடம் :-------. பரீட்சை சுட்டெண் :----------.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

11. வாழ்க்கைத் தொழில் மற்றும் பிற தகைமைகள் :

| பாடநெறியின் பெயர் | நிறுவனம் | பாடநெறியின் காலப்பகுதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

12. அனுபவம் :

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

இவ் விண்ணப்பப் படிவத்தில் என்மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், எனது அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் உண்மையானது என்றும் மற்றும் சரியானது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

1-628

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2015 (II) 2021

*1.0 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்களுக்கான ஒரு வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையானது 2013.12.11 ஆந் திகதிய 1840/ 34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரிவு 8, பிரிவு 15 (இடைக்கால ஏற்பாடுகள்) மற்றும் இணைப்பு 06 இற்கமைய 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*2.0 (i) இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் அமுலாக்கத் திகதிக்கு முன்னர் தரம் I இற்குப் பதவியுயர்த்தப்பட்டுள்ள மற்றும் 05 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள அத்துடன் 05 சம்பள ஏற்றங்களை ஈட்டியுள்ள அலுவலர்கள் இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் தரம் I இற்குரிய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையினைச் சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.*

*(ii) இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் அமுலாக்கத் திகதிக்கு முன்னர் தரம் I இற்குப் பதவியுயர்த்தப்பட்டுள்ள ஆனால் 05 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்திராத அத்துடன் 05 சம்பள ஏற்றங்களை ஈட்டியிராத அலுவலர்களுக்கு இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் தரம் I இற்கு உரிய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையினைச் சித்தியெய்துவதற்கு இச்சேவைப் பிரமாணக் குறிப்பு பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து 05 வருட சலுகைக்காலம் ஒன்று வழங்கப்பட வேண்டும்.*

*3.0 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை போதுமான அளவில் இல்லாதிருத்தல் அல்லது வேறு காரணம் என்பவற்றின் காரணமாக நிலையம் ஒன்றினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் தனது தற்றுணிபின் பேரில் விண்ணப்பதாரிகளின் இரண்டாம் விருப்புரிமைக்கு இணங்க நிலையத்தினைத் தீர்மானிப்பதற்கும் உரிமை உள்ளது. சகல முன்மொழியப்பட்ட நகரங்களிலும் அல்லது பெரும்பாலான நகரங்களில் பரீட்சை நிலையங்களைக் கொண்டிருப்பதற்கு போதுமானளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திராவிடின் கொழும்பில் மாத்திரம் இப்பரீட்சையினை நடாத்துவதற்கான ஒழுங்குகளை பரீட்சை ஆணையாளர் நாயகம் மேற்கொள்வார். நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கு இணங்க விண்ணப்பத்தின் உரிய பிரிவானது பூர்த்திசெய்யப்பட வேண்டும். விண்ணப்பிக்கும் நகரம்/ நகரங்களை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது :-*

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

4. (i) இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் அவரினால் விதிக்கப் படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு சகல விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளானவை வர்த்தமானி அறிவித்தலில் வெவ்வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறியமைக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு அவர்கள் உட்பட வேண்டும்.

5.0 **தகைமைகள்**.- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இற்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுகின்றனர்.

**குறிப்பு**.- தரம் I இற்கு பதவியுயர்வு பெற்ற திகதியிலிருந்து 05 வருடத்திற்குள் இப்பரீட்சையினைச் சித்தியெய்தல் வேண்டும். இவ்வறிவித்தலுக்கு சமாந்தரமாக மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் பொருத்தமான மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலமும் வேறு நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் குறித்த நிறுவனத்தின் மூலமும் வெளியிடப்படும். ஒவ்வொரு மாகாண அரசாங்க சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்படுதல் வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும்போது விண்ணப்பத் தலைப்பில் இவ் இலக்கங்கள் குறிப்பிடுதல் வேண்டும். இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10 ஆகும். அவ் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலது பக்க மேற் பக்கத்தில் தங்களுக்குரிய சேவை எனும் இடத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும். (சரியான இலக்கத்தை குறிப்பிடாது விடுவதனால் ஏற்படும் பெறுபேறு வெளியீடு தொடர்பான சிக்கல்களுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது.)

6.0 இப்பரீட்சைக்கான விண்ணப்பமானது இவ் அறிவித்தலில் பின்னிணைக்கப்பட்ட மாதிரிப்படிவத்தில் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் மாதிரிப் படிவத்திற்கு இணங்க தாமாகவே விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2021, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர்

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

என்னும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக உரிய திணைக்களத் தலைவரின் ஊடாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு முன்னளிக்கப்படும் விண்ணப்பக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் உரிய விபரங்கள் கொடுக்கப்பட்டிராத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

7.0 (i) **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்துவதற்கு பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு கோரப்படுவர். இந்நோக்கத்திற்காக, பின்வரும் ஆவணங்களில் ஒன்று மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசித்தது முதல் பரீட்சை நிறைவு பெற்று வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

(ii) **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை**.- விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்யும் போது மிகக் கவனமாகவும் சரியான தகவல்களைக் கொண்டும் நிரப்புதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப எவரேனுமொரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்ய முடியும்.

8.0 (i) **விண்ணப்பங்கள்**.- மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பந்தியின் 1.0 முதல் 6.0 வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கங்களிலும் தோன்றும் விதத்தில் "A4" அளவிலான தாளில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சு செய்யப்பட்டதாக இருக்க முடியும். ஆனால் அது விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பமானது பின்னிணைக்கப்பட்ட மாதிரியுடன் ஒத்திசைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒன்றுக்குக் கூடிய விண்ணப்பங்களை அல்லது நிழற்படப் பிரதிகளை (போட்டோப் பிரதிகள்) அனுப்பாதிருக்குமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது. மாதிரியுடன் இணங்காத மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில், மாதிரிப் படிவத்தில் தோன்றும் பரீட்சைத் தலைப்பினை தமிழ், சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும். தன்னால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்ட மாதிரியுடன் இணங்குகின்றது என்பதை உறுதிப்படுத்திக்கொள்வது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.

(ii) முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அடுத்த அமர்வுகளுக்கு முழுப் பரீட்சைக்கும் அல்லது ஒன்றுக்குக் கூடுதலான பாடங்களிற்கு ரூபா 500.00 உம், ஒரு பாடத்திற்கு மட்டும் ரூபா 250 உம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கப்படுவதற்கென நாடளாவிய ரீதியிலுள்ள ஏதேனுமோர் அஞ்சல்/உப அஞ்சல் அலுவலகத்தில் அல்லது மாவட்ட/பிரதேச செயலகத்தில் காசாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது பிரயோசனப்படக்கூடும். இப்பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணத்தினை இன்னொன்றின் சார்பில் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணமாக முத்திரை அல்லது காசுக்கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9.0 (i) வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் அனுமானத்துடன் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வயதெல்லையைக் கொண்டதும், விண்ணப்பமுடிவுத் திகதியில் அல்லது அதற்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்குப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன், அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சையின் பெயர், பரீட்சார்த்தியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றினை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். மேலேயுள்ள விபரங்களையும் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றினை அனுப்புவதற்கான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தையும் குறிப்பிட்டு தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஒரு கோரிக்கைக் கடிதத்தினை தொலைநகலில் அனுப்புவது கொழும்புக்கு வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுக்கு பயனுள்ளதாக அமையும். அவ்வாறு பரீட்சைகள் திணைக்களத்திடம் விசாரிக்கும் போது ஏதேனும் தகவல்களை நிரூபிப்பதற்காக தன்வசம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் தபாலிடும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டு என்பவற்றினை வைத்திருப்பது பயனளிக்கும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்றினை வழங்குதலானது பரீட்சார்த்தியானவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதலாகாது.

(ii) விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரொருவரால் சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(iii) பரீட்சைக்காக தோற்றவுள்ள முதல் நாளிலே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பத்தினை சான்றுப்படுத்திய பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

10.0 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவாக அவர்களுக்கான கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர்கள் அனுமதிக்க வேண்டும். எதுவித பிரயாணச் செலவினமும் செலுத்தப்படமாட்டாது.

11.0 எழுத்துப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் நடாத்தப்படும். குறித்த சேவைக்கு நுழைவுப் பரீட்சைக்குத் தாம் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் மூன்று வினாப்பத்திரங்களுக்கும் விடையளிக்கலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குள் உள்வந்த பரீட்சார்த்திகள் அவர்கள் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழிகளில் ஒன்றில் மூன்று வினாப் பத்திரங்களுக்கு விடையளிக்கலாம். விண்ணப்பத்தில் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பரீட்சையின் மொழி மூலத்தினைப் பின்னர் மாற்ற முடியாது.

12.0 அலுவலர்கள் தமது தற்றுணிபின் பேரில் வெவ்வேறான தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் வேறுவேறாக தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் மொத்தப் புள்ளிகளில் குறைந்தது 40% இனை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் இணைப்பு 06 இனைப் பார்க்கவும்)

13.0 பரீட்சைக்கு தோற்றிய சகல விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகளை உள்ளடக்கிய பெறுபேற்று ஆவணம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் மூலம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு வழங்கப்படும். பரீட்சையில் சித்தியெய்திய பரீட்சார்த்திகளின் பெயர்கள் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

14.0 **பரீட்சை நடைமுறை**.- பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றுக்கு பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும் :

| *பாடம்* | *புள்ளிகள்* | *காலம்* | *பாட இலக்கம்* | *வெட்டுப் புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| தாபனப் பணிகளும் செயலொழுங்கு விதிகளும் | 100 | 1 1/ 2 மணித்தியாலம் | 01 | 40 |
| அரச நிதி முகாமை | 100 | 1 1/ 2 மணித்தியாலம் | 02 | 40 |
| சமகாலப் போக்குகள் | 100 | 01 மணித்தியாலம் | 03 | 40 |

14.1 *தாபனப் பணிகளும் செயலொழுங்கு விதிகளும்*.- அலுவலக முறைமைகளின் அடிப்படைகள், அவற்றின் முக்கியத்துவம், எழுத்து மூலமான தொடர்பாடல், ஆவணங்களைக் கோவைப்படுத்தல், மாதிரிப் படிவங்களைத் தயாரித்தல் போன்ற துறைகளை உள்ளடக்கிய வகையில் அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அலுவலக முறைகள் பற்றிய அறிவு, அலுவலகச் செயற்பாடுகளின் போது பெற்றுக்கொண்ட அனுபவத் தேர்ச்சி என்பனவற்றை பரீட்சிப்பதற்கான பகுதி, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகள் I ஆம் தொகுதி, தாபன விதிக்கோவையின் தொகுதி I மற்றும் தொகுதி II என்பவற்றில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பான அறிவு என்பவற்றைப் பரீட்சிக்கும் பகுதி என்பனவற்றை இவ்வினாப்பத்திரம் உள்ளடக்கியிருக்கும்.

பகுதி I - பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாளாகும். காலம் : 30 நிமிடங்கள் ஆகும். (25 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக் கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாள் இதுவாகும். நான்கில் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். காலம் : 60 நிமிடங்கள் ஆகும். (75 புள்ளிகள்).

14.2 *அரசாங்க நிதி முகாமை*.- அரசாங்க திணைக்களங்களிலும், அமைச்சுக்களிலும் பயன்பாட்டிலுள்ள நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்புக்கள், வருமானங்களும் கொடுப்பனவுகளும், வரவு செலுத் திட்ட மதிப்பீடு, வழங்கல் வேலைகள் மற்றும் சேவைகள் ஆகிய விடயங்கள் (தொகை மதிப்பீடு, களஞ்சியப்படுத்தல், நிதி ஒழுங்குவிதிகள், கணக்காய்வு அடிப்படை அறிவு, வங்கி தொடர்பான அடிப்படை பரீச்சயம்) தொடர்பான அறிவும் விளக்கமும் இவ்வினாப் பத்திரத்தின் மூலம் பரீட்சிக்கப்படும்.

பகுதி I - பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாள் இதுவாகும். காலம் : 30 நிமிடங்கள் ஆகும். (25 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக் கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாள் இதுவாகும். நான்கில் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். காலம் : 60 நிமிடங்கள் ஆகும். (75 புள்ளிகள்)

14.3 **சமகாலப் போக்குகள்.**- இவ்வினாப் பத்திரம், உள்நாட்டு மற்றும் சர்வதேச சமகால நிகழ்வுகள் தொடர்பான அறிவைப் பரீட்சிக்கும் பகுதியினையும், அலுவலக முகாமை தொடர்பான புதிய போக்குகள், அரசாங்க சேவையின் சேவை வழங்கல் தொடர்பான புதிய போக்கு மற்றும் நல்லாட்சி தொடர்பிலான அறிவினை பரீட்சித்தலுக்கான பகுதியினையும் இவ் வினாப்பத்திரம் உள்ளடக்கியிருக்கும். இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள் மற்றும் சிறு விடைகள் வழங்கக்கூடிய வகையான வினாக்களை உள்ளடக்கும். (சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

15.0 இவ் அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயத்தில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

16.0 இப்பரீட்சை அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

எஸ். ஆலோகபண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2021, சனவரி 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

**முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2015 (II) (2021)**

Efficiency Bar Examination for Officers in Grade I of Management Services Officers' Service - 2015 (II) (2021)

(இப்பரீட்சை அறிவித்தலுக்கமைய இணைந்த சேவைக்குரிய முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க தகைமை பெறுகின்றனர்.)

தங்களுக்குரிய சேவை (இப் பிரிவினை நிரப்புவதற்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 5.0 இனது குறிப்பினைக் கவனமாகப் பார்க்கவும்.) ☐

(வர்த்தமானி அறிவித்தலின் பிரிவு 3.0 இற்கமைய தங்களின் விருப்பத்தேர்வுக்கு இணங்க தாங்கள் பரீட்சைக்குத் தோற்ற உத்தேசிக்கும் நகரத்தினைக் குறிப்பிடவும்) (இதனைப் பின்னர் மாற்ற முடியாது)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

பரீட்சையின் மொழி ஊடகம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

1.0 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : (GUNAWARDHANA. H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.0 சேவை நிலையத்தின் பெயர் மற்றும் முகவரி :-

2.1 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3.0 பால் :-

பெண் – 1

ஆண் – 0

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

4.0 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

5.0 கையடக்க தொலைபேசி இலக்கம் :

6.0 நீங்கள் தோற்றும் பாடம்/ பாடங்கள் :

| பாடம் | பாட இல. |
|---|---|
| | |
| | |
| | |

7.0 தற்போது வகிக்கும் பதவி :

7.1 பதவி :----.

7.2 நியமனக் கடித இலக்கம் :----.

7.3 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இற்கான நியமனத் திகதி :----.

8.0 8.1 நீங்கள் முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்களா ? :----.

8.2 இல்லையெனின், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.

8.3 அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகம் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகம் :----.

8.4 பற்றுச்சீட்டு இலக்கம் :----.

8.5 திகதி :----.

பற்றுச்சீட்டின் விளிம்புப் பகுதியினை கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றினை வைத்துக்கொள்வது உசிதமானது.)

9.0 **விண்ணப்பதாரியின் பிரகடனம்** :

மேலே தரப்பட்ட தகவல்கள் சரியானது என்றும், மேலே குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்குத் தகுதியுள்ளது என்றும் இப்பரீட்சைக்கு நான் முதற் தடவையாகத் தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்த வேண்டியதில்லை/ .............................. ஆம் திகதியில் ......................... அஞ்சல் / உப அஞ்சல் அலுவலகம் அல்லது மாவட்ட/பிரதேச செயலகத்துக்கு ரூபா ..................... கொண்ட பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியதன் பேரில் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை மேலே ஒட்டியுள்ளேன் என்றும் நான் வெளிப்படுத்துகின்றேன். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கும் மற்றும் பரீட்சைச் சட்டத்தின் சகல ஏற்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதற்கு நான் உடன்படுகின்றேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவரின் சார்பில் கையொப்பமிட குறித்தொதுக்கப்பட்ட ஓர் அலுவலர் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இடுதல் வேண்டும்.

**கையொப்பத்தினைச் சான்றுறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் பணியாளரும் எனக்குத் தனிப்பட்ட ரீதியில் தெரிந்தவருமான திரு./திருமதி/செல்வி ................ ...................................................... என்பவர் .................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பத்தினை இட்டார் என்றும் அவர் முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணத்திலிருந்து அவர் விலக்குப் பெறுதல் உசிதமானது/பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் நான் சான்றுறுதிப்படுத்துகின்றேன்.

------,
சான்றுறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*10.0* **திணைக்களத் தலைவரின் சான்றுரை**

நான் பின்வருவனவற்றைச் சான்றுப்படுத்துகின்றேன்,

(i) மேலே தரப்பட்ட தகவல்கள் சரிபார்க்கப்பட்டது மற்றும் ;
(ii) அலுவலர் இணைந்த சேவைக்கு உரியவர் ;
(iii) அலுவலர் முன்னர் இப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்*/ தோற்றியிருக்கவில்லை ;
(iv) அலுவலர் முன்னர் இப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார் என்பதுடன் உரிய பரீட்சைக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை அவர் ஒட்டியுள்ளார்;
(v) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அலுவலருக்குத் தகுதியுள்ளது.

* (பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடவும்.)

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*01-489*

## சுகாதார அமைச்சு

### ஆரம்ப வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப்பரீட்சை - 2020, செத்தெம்பர்

2014.10.11 ஆந் திகதிய 1883/ 17 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்பத் தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும், அத்தோடு பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும், உத்தியோகத்தர் ஒருவர் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து இரண்டு வருட காலத்தினுள் சித்தியடைய வேண்டியதுமான திணைக்களப் பரீட்சை 2021.02.28 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

2. **தகைமைகள்**.- உரிய பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத ஆரம்பத் தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப்படுத்தப்படாத பல் சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் இத்திணைக்களப் பரீட்சையினைப் பூரணப்படுத்தப்படுத்தியிராத நிர்வாகத் தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

3. **விண்ணப்பங்கள்**.- இச்சுற்று நிருபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று விண்ணப்பதாரிகளினால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் நிறுவனத் தலைவரிடம் பாரமளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ளதாக நிறுவனத் தலைவர் சான்றுப்படுத்திய பின் விண்ணப்பமானது "சுகாதார அமைச்சு, கொழும்பு 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, சுவசிரிபாய கட்டிடடத்தில் பணிப்பாளர் (பரீட்சை)" அவர்களுக்கு 2021.01.29 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட ரூபா 45.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9" × 4" அளவுள்ள கடித உறைகள் 2 அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).

**கவனிக்கவும்**.- மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும். முதற்பக்கத்தில் இலக்கம் 01-04 (உ) தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 04(ஊ)-09 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

04. **பரீட்சைக் கட்டணம்**.-

(i) முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் புரியப்படுதல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

05. **பரீட்சைக்கு உட்படுத்தல்**.-

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(இ) வலுவுள்ள அனுமதிப்பத்திரம் ;
(ஈ) வலுவுள்ள கடவுச்சீட்டு.

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்). (சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி : www.health.gov.lk).

06. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை மூன்று எழுத்து மூல கட்டுரை வினாப்பத்திரங்களையும் சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சை ஆகிய 04 பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக்கொள்ளலாம்.

07. **பரீட்சைப் பாடத்திட்டம்**.-

7.1 ***எழுத்துப் பரீட்சை***

7.1.1 *தாபனவிதிக்கோவை வினாத்தாள்*

நேரம் 02 மணித்தியாலம். 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம்

(i) சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள்.

(iii) தாபனவிதிக்கோவை

I ஆம் பிரிவு :- VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII அத்தியாயங்கள்.

II ஆம் பிரிவு :- XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

7.1.2 *வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாக வினாத்தாள்*

நேரம் : 1 1/2 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம்

சுகாதாரக் கைந்நூல்

(i) வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்

(ii) ஆய்வுகூட சேவை முகாமைத்துவம்

(iii) மருந்து முகாமைத்துவம்

7.1.3 *கணக்கியல் :*

நேரம் 02 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்,

பாடவிதானம்

(i) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்

(ii) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைந்நூலில் நிதி தொடர்பான பந்தி

(iii) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்

| | |
|---|---|
| I ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 1, 2, 78 |
| II ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119 |
| III ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189 |
| V ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260 |
| VI ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394 |
| VII ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 488, 493 |
| XIII ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 715, 716, 756, 757, 758 |

பெறுகை வழிகாட்டிக் கோவை :

*1 ஆம் அத்தியாயம் - அனைத்துப் பிரிவுகளும்*

*2 ஆம் அத்தியாயம் - 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8*

*3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9*

7.2 **சிங்களம்/தமிழ்/வாய்மொழிப் பரீட்சை**.- சிங்களம்/தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகள் தொடர்பாக சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியிலும், தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல். (நேரம் : 10 நிமிடம்)

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைபிடித்தல்**.- பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினைப் பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதன் ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

**குறிப்பு**.- இச்சுற்றுநிரூப கடிததத்தில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் ஏதாவது ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

வைத்தியர் எஸ். எச். முணசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2021, சனவரி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலகப் பிரயோகத்தின் பொருட்டு)

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2020, செத்தெம்பர்**

01. (அ) (i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (தமிழில்) :..............................................................................................
..................................................................................................................................

(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :..............................................................................................
..................................................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடடல் எழுத்துக்களில்) :-

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி (உரிய கூட்டினுள் (✓) அடையாளமிடுக).

(i) வைத்திய உத்தியோகத்தர் : ☐ (ii) பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் : ☐

(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :..................................

(iii) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி/ தரம் II :................................

02. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (x) குறியை இடவும்.

வைத்தியசாலைகள் மருந்துச்சாலைகள் என்பவற்றின் நிர்வாகம் : ☐ தாபன விதிக்கோவை : ☐ கணக்கியல் : ☐

சிங்களம் வாய்மொழி : ☐ தமிழ் வாய்மொழி : ☐

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (உரிய கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும்.)

சிங்களம் : ☐ ஆங்கிலம் : ☐ தமிழ் : ☐

04. (அ) (i) தற்பொழுது சேவையாற்றும் சேவை நிலையம் :-----.

(ii) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது : மத்திய அரசின்கீழ் ☐

மாகாண அரசின்கீழ் ☐

(ஆ) (i) மாகாண சபையாயின் உரிய மாகாணம் :-----.

(ii) அதற்குரிய மாவட்டம் :-----.

(இ) கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(உ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம்.- (தெரிவுசெய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்) பொருத்தமான கூட்டினுள் சரி (✓) அடையாளமிடுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | | கந்தானை | | அம்பாந்தோட்டை | | அம்பாறை | |
| களுத்துறை | | காலி | | பதுளை | | வவுனியா | |
| குருநாகல் | | அநுராதபுரம் | | இரத்தினபுரி | | பொலநறுவை | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | | திருகோணமலை | |

(ஊ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" × 4" அளவுள்ள ரூபா 45.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறைகள் இரண்டு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(எ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :---------------------.

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :---------------------.

05. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீரா? :----------------.
(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? :-------------------------.

| முத்திரைக் கூண்டு (முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமிடுக.) |
|---|

06. விண்ணப்பதாரரின் சான்றிதழ்:
எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்-

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/ முதன் முறை அல்லாதபடியால் ரூபா .......... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதார அமைச்சினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின்படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

07. சுயவிபரக் கோவையினைக் கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ் :

இவ்விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இத்திணைக்களப் பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இவ்விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

---------, ---------,
பெயர் கையொப்பமும், திகதியும்.

08. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

திருவாளர்/ திருமதி/ செல்வி ................................ என்பவர் எனது நிறுவனத்தில் சேவை புரியும் வைத்திய உத்தியோகத்தர்/ பல் வைத்தியர் என்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/ அல்லாத படியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

------
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

09. விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ் :

திருவாளர்/ திருமதி/ செல்வி ................................ என்பவர் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் ஒருவராக/ பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/ விசேட இயக்கத்
தலைவரின் கையொப்பம்
(முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :-----.

(தேவையற்றவற்றைக் கீறிவிடவும்.)

01-702

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.